# NFTE - BSNL

**சென்னை தொலைபேசி**

## போராட தயாராவோம்! நியாயம் பெறுவோம்!!!

அருமைத் தோழரே !

ஊதிய உயர்வு பிரச்சனையில் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் தவறான அணுகுமுறையால் முட்டுக்கட்டை ஏற்பட்டு விட்டது. நிர்வாகம் மூன்று மாத அடிப்படை சம்பளத்தை மட்டுமே முன் பணமாக தாமுடியும் என பிடிவாதமாக கூறிவிட்டது. ஊழியருக்கு ஊதிய உயர்வு மற்றும் முன்பணம் வழங்க நிறுவனத்தின் நிதிநிலை மோசமாக உள்ளதாக கூறும் நிர்வாகம் உயரதிகாரிகளுக்கு ஊதிய உயர்வையும் நிலுவைத் தொகையையும் லட்சக்கணக்கில் வாரி வழங்கியது எப்படி என்பதை விளக்கவில்லை.

களப்பணியாற்றும் 2.45 லட்சம் ஊழியருக்கு பாதகம் செய்யும் நிர்வாகம் அதிகாரிகளுக்கு மட்டும் சாதகம் செய்துள்ளது. இந்த பாரபட்சத்தை முறியடிக்க நமது தொழிலாளர் கூட்டணி வேலை நிறுத்த 'நோட்டீஸ்' கொடுத்துள்ளது. இதன்படி மே 19 முதல் தலைவர்கள் டில்லியில் கால வரையற்ற பட்டினிப் போராட்டம் துவங்குவர். மே 20 முதல் நாடு தழுவிய கால வரையற்ற வேலை நிறுத்தம் துவங்கும்.

1.1.2007ல் கிடைத்திருக்கவேண்டிய ஊதிய உயர்வு இரண்டாண்டு தாமதத்திற்கு பிறகு ஊழியருக்கு இன்னமும் கிட்டவில்லை. இதற்கு நிர்வாகத்தின் மெத்தனம் மட்டும் காரணமல்ல. அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் அக்கறை இன்மையும் காரணம்.

கடைசியாக கிடைத்த தகவலின் படி நிர்வாகம் ரூ. 12000/- மட்டுமே முன்பணமாக வழங்க முன்வந்துள்ளது. அதிகபட்ச ஊதியமாக அதிகாரிகள் ரூ. 80,000/- முதல். ரூ. 1,25,000/- வரை பெறும் பொழுது ஊழியர்களுக்கு மட்டும் அதிகபட்ச ஊதியமாக ரூ. 18,850/- முதல் ரூ. 40500 /- வரை தான் தர இயலும் என நிர்வாகம் அறிவித்துள்ளது. மாதந்தோறும் நமது ஊழியருக்கு இதனால் ரூ. 400/- முதல் ரூ. 1200/- வரை தான் கூடுதலாக கிடைக்கும். இது அநியாயம். இந்த அநீதியை அகற்ற நாம் போராட தயாராவோம்.

நிர்வாகம் 2006 டிசம்பரிலேயே ஊதிய உயர்வுக்கான குழுவை அமைத்த பிறகும் நம்பூதிரி சங்கம் ஏனோ தூங்கியது. பின்னர் மார்ச் 2009 ல் தான் அது விழித்துக் கொண்டது. அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு வழங்கிய போதே அங்கீகரிக்கப்பட்ட சங்கம் போராட்டத்தை அறிவித்திருந்தால் இத்தகைய அவலநிலையை இன்று நாம் சந்திக்க தேவையிருக்காது. தனது திறமையின்மையை திசை திருப்பவும் – செயலற்ற போக்கை மூடி மறைக்கவும் எம்ப்ளாயீஸ் யூனியன் ஊதிய உயர்வில் தாமதம் ஏற்பட்டதற்கு கூட நமது கூட்டணியை குறைகூறி பொய்ப்பிரச்சாரம் செய்கிறது. அச்சங்கம் நாம் அங்கீகாரத்தில் இருந்தாலும் நம்மை குறைகூறியது. அங்கீகாரத்தில் நாம் இல்லாத போதும் நம்மை குறை கூறுகிறது.

நம்மை ஏசுவதை விட்டு விட்டு நிர்வாகத்தை தட்டிக் கேட்கும் துணிச்சல் எப்போது அச்சங்கத்திற்கு வருமோ ?

போராட்ட வாழ்த்துக்களுடன்.

**(C.K. மதிவாணன்)**
மாநிலச் செயலாளர்

24.04.2009